ஆண்டு பட்டிகை வழக்கு எண்.128/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 128/2024 LW- 11 PW- 7

| | |
|---|---|
| Name | : தர்மர் (முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : முத்துக்கண்ணன் |
| Village | : சார்பு ஆய்வாளர் |
| Taluk | : வேடசந்தூர் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 57/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது வேடசந்தூர் காவல் நிலையத்தில் காவல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2024ம் தேதி காலை 8.30 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்தபோது நத்தம், கோட்டையூர் அஞ்சல், சின்னையம்பட்டியைச் சேர்ந்த முனியாண்டி பிள்ளை என்பவரது மகன் சேகர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமான கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.280/2024 279, 304-A I.P.C பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை நான் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 9.30 மணிக்கு சம்பவ இடமான கோட்டையூர் – சிறுகுடி ரோடு, சின்னையம்பட்டி பிரிவு அருகே வைத்து சாட்சிகள் ஆனந்த் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சம்பவ சாட்சிகள் சேகர், பாலகிருஷ்ணன், பொன்னுச்சாமி, லெட்சுமி, ஆனந்த் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 12.05.2024ம் தேதி இவ்வழக்கில் இறந்து போன சத்யா என்பவரது பிரேதத்தின் மீது 13.30 மணி முதல் 14.30 மணி வரை திருச்சி SRM மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின்னர் இறந்துபோன சத்யா என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்வதற்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவருக்கு நத்தம் மு.நி.பெண் காவலர் திருமதி.கலைச்செல்வி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன். **(அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் எனது முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.தங்கமுனியசாமி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

5) 04.05.2024ம் தேதி நடந்த சம்பவத்திற்கு புகார் மனுவானது 12.05.2024ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் மனுவை யார் எழுதினார் என்று தெரியாது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 12.05.2024ம் தேதி பதிவு செய்யப்பட்டு 24.06.2024ம் தேதிதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், வெளி அலுவலில் பணியில் இருந்ததால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. மேற்படி காலதாமதம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் தனது மகள் சத்யாவிற்கு வெளிப்புற காயங்கள் இல்லை என்றும், எதிரி தெரிந்த நபர் என்பதால் நடவடிக்கை வேண்டாம் என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) விபத்தானது இறந்த நபர் இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் சாலையில் உள்ள பள்ளத்தில் தானே விழுந்ததால் இறந்த நபரின் கவனக்குறைவால் விபத்தானது ஏற்பட்டுள்ளது என்பதால்தான் நடவடிக்கை வேண்டாம் என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டுதான் புகார் கொடுத்ததாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 சம்பவ இடம் சென்று அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக புகாரில் சொல்லப்பட்டிருந்தால் அது தவறானது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் வழக்கு விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமான வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் சாலையானது சிறிது இறக்கமாக இருக்கும் என்றால் சரிதான்.

7) சிறுகுடி – கோட்டையூர் ரோடு, சின்னையம்பட்டி பிரிவில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். அந்த வேகத்தடை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான், அது சிறிது தள்ளி உள்ளது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால்

சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் சாலையின் நடுபுறத்தில் பள்ளம் உள்ளதை குறிப்பிட்டு காட்டியிருப்பேன் என்றால் சரியல்ல, அவ்வாறான பள்ளம் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள விஜயன், கருங்கண்ணன் ஆகியோரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லும்போது அவர்கள் அங்கு இல்லை. நான் சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சொன்ன தேதியில், நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இறந்தவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதறக்காக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.26 15:48:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்